DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 294/2019

Deposition of witness for P.W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : கலையரசி | Caste | : |
| Father/Husband Name | : வெங்கடாசலம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 12-12-2022

**முதல்விசாரணை**

1) நான் 93/94 முனியப்பன் கோவில் வீதி, மாணிக்கம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன்.

2) சிவன்மலை, பிரபு, சரஸ்வதி ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 2014 ல் அ.வ. எண் 62/2014 என்ற வழக்கை தாக்கல் செய்து 7 வது மாதம் 2015 ல் எனக்கு ஆதரவாக தீர்ப்பானது. மாணிக்கம்பாளையத்தில் உள்ள பிரச்சனைக்குரிய எங்கள் வீடு பழைய வீடாகும். பராமரிப்பிற்காக என்னுடைய வீட்டின் சுவற்றை கட்டினோம். சிவன்மலை மற்றும் சரஸ்வதி, பிரபு ஆகியோரின் வீடுகள் எங்கள் வீட்டிற்கு பின்புறம் உள்ளது. 6 வது மாதம் 2017 ல் நாங்கள் சுவற்றிற்கு மராமத்து வேலை பார்த்துக்கொண்டிருந்தோம். சிவன்மலை, சரஸ்வதி ஆகியோர் வேலை செய்யக்கூடாது, எங்களுடைய இடம் என பிரச்சனை செய்தார்கள். ஆனால் நாங்கள் எங்களுடைய இடம் என தீர்ப்பு பெற்றதற்கு பிறகு தான் வேலை செய்தோம். நாங்கள் வேலை செய்து கொண்டிருக்கும்போதே கட்டிய சுவற்றை இடித்துவிட்டனர், கடப்பாறை, மம்முட்டி ஆகியவற்றை வைத்து இடித்துவிட்டனர்.

3) கண்டாரோழி போன்ற கேவலமான வார்த்தைகளால் திட்டினார்கள். சிவன்மலை, பிரபு, சரஸ்வதி ஆகியோர் திட்டினார்கள். வேலை செய்யவிடாமலும் தடுத்துவிட்டனர். தடுக்கும்

போது மேலிருந்து எனது கணவர் கீழே விழுந்துவிட்டார். கொன்றுவிடுவதாகவும் 3 பேரும் மிரட்டினார்கள். **நான் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்புரை அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தீர்ப்பாணை அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4) அவர்கள் பிரச்சனை செய்ததை போட்டோ எடுத்தோம். இதுசம்மந்தமாக வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. **புகார் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உடைத்தவைகளின் மதிப்பு ரூ.30,000/- இருக்கும். போலீசார் புகார் கொடுத்தவுடன் என்ன செய்தார்கள் என்றால் லேட்டாகத்தான் வந்து பார்த்தனர். என்னிடம் காட்டப்படுவதுதான் அன்றையதேதியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள். **அந்த புகைப்படங்கள் 3 மற்றும் குறுந்தகடு அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 294/2019

Deposition of witness for P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடாசலம் | Caste | : |
| Father/Husband Name | : பெருமாள் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 12-12-2022

**முதல்விசாரணை**

1) நான் 93/94 முனியப்பன் கோவில் வீதி, மாணிக்கம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன்.

2) அ.சா.1 கலையரசி எனது மனைவி. சிவன்மலை, பிரபு, சரஸ்வதி ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 2014 ம் வருடம் எனது மனைவி 62/2014 என்ற வழக்கை தாக்கல் செய்தார். ஜூலை மாதம் 2015 ம் வருடம் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பானது. அந்த சுவர் 100 ஆண்டுகாலம் பழமை வாய்ந்த சுவராகும். அதனை மராமத்து பணி 2017 ல் செய்தோம். ஜூன் மாதம் என நினைக்கிறேன், 2017 ம் வருடம் காலை 8.00 மணிக்கு நாங்களும், கொத்தனாரும், இரும்பு வேலை செய்பவர்களும் செய்துகொண்டிருந்தோம். அப்போது மேற்படி சிவன்மலை, பிரபு, சரஸ்வதி ஆகியோரும் அய்யாவு மற்றும் அவர்களை சார்ந்தவர்களும் நாங்கள் வேலை செய்வதை தடுத்தார்கள். தடுத்த பிறகு கட்டிய கட்டிடத்தை கடப்பாறை மற்றும் மம்மட்டி, சம்மட்டி ஆகியவற்றால் இடித்தனர். நாங்கள் தீர்ப்பானது எனவும், ஆகவே தீர்ப்பின்படி நடந்துகொள்ளுங்கள் எனவும் நீதிமன்றத்திற்கு செல்லும்படி கூறினோம். அவர்கள் நீதிமன்ற தீர்ப்பை மதிக்கவேண்டிய அவசியம் இல்லை என கூறி இடிக்க ஆரம்பித்தனர்.

3) அதனை கைபேசி மூலம் நான் பதிவு செய்தேன். அதன் பிறகு என் மனைவி புகார் அளித்தார். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை, நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நீதிமன்ற உத்தரவின்படி வழக்கு பதிவு செய்தனர். இடித்தவைகளின் மதிப்பு ரூ.30,000/- இருக்கும். என்னிடம் காட்டப்படுவதுதான் அன்றையதேதியில் என்னால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள். அந்த புகைப்படங்கள் **3** மற்றும் குறுந்தகடு ஏற்கனவே அ**.**சா**.**ஆ **4** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**.** போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை**.**